# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 35 தொலை பேசி: 23411 நிறுவியது ·1947.

வள்ளுவர் ஆண்டு 2008 | ஜ. ஆகிர். 6 | வைகாசி 12 (25·5-77) புதன் | புத்தகம் 30 | இதழ் 112


## 'தமிழன் குரல்' ஆசிரியர் வருகிறார்!

லண்டன் தமிழன் முன்னேற்றக் கழகம், ஈழ விடுதலை முன்னணி ஆகியவற்றின் உறுப்பினரும், லண்டனிலிருந்துவெளிவரும் தமிழன் குரல்' ஏட்டின் ஆசிரியருமான திரு. தேவதாஸ் நாளை வியாழக்கிழமை (2 -5-77) நண்பகல் கொழும்பு வருகிறார். அவர் இங்கு பல பொதுநிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவிருக்கிறார்.



# தமிழ்த் தோட்டத் தொழிலாளி மரணம்

# படுகொலை!

## நுவரெலியா நீதிபதி தீர்ப்பு!

**பத்தனை டெவன் தோட்டத்தில் பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் உயிர் நீத்த இலட்சுமணனின் மரணம் படுகொலையென மரணவிசாரணை நடத்திய நுவரெலியா நீதிபதி தீர்ப்பு வழங்கியிருக்கிறார். எனினும் இந்தப் படுகொலைக்கு காரணமான பொலிசார் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை!**

*11-5-77*ந் திகதி குடியிருக்க நிலம் கோரிய தமிழ்தோட்டத்தொழிலாளர்கள் மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததும், இந்த துப்பாக்கிப் பிரயோகத்தின் போது இலட்சுமணன் என்று அழைக்கப்படும் தர்மராஜ் என்ற தமிழ்த் தோட்டத் தொழிலாளி ஸ்தலத்திலேயே துடிதுடிக்க பதைபதைக்க உயிரிழந்தது தெரிந்ததே.

இவரது மரணம் குறித்து நுவரெலியா நீதிபதி விசாரணை நடத்தினார். விசாரணை முடிவில் இலட்சுமணனின் மரணம் படுகொலை என நீதிபதி தீர்ப்பு வழங்கியுள்ளார்.

கொலைக்குக் காரணமான சந்தேக நபர்களைக் கைது செய்யஉத்தரவுஇடவேண்டுமென இறந்தவரின் சார்பாக ஆஜரான சட்டத்தரணி திரு. ஜெயா பெரிசுந்தரம் நீதவானிடம் கோரியபோது, "இது மரண விசாரணை; கைதுசெய்யும் படி உத்தரவுகொடுக்க என்னால் முடியாது' என்று நீதவான் பதிலளித்தார்.

ஏற்கெனவே யாழ்ப்பாணத்தில் பரராசா என்ற தமிழ் இளைஞரின் மரணம் படுகொலையென நீதவான் தீர்ப்பு வழங்கி, சந்தேக நபர்களான பொலிசாரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டதும், குறித்த பொலிசாரை அரசாங்கமே விடுதலைசெய்து அவர்களுக்கு மீண்டும்வேலை வழங்கி அநீதிக்கு துணை போனதும் தெரிந்ததே.

பரராசா படுகொலைக்கும் நடவடிக்கையில்லை; இலட்சுமணன் படுகொலைக்கும் நடவடிக்கை இல்லை; ஏனெனில் இருவரும் தமிழர்கள். ஆனால் பேராதனை பல்கலைக்கழகத்தில் ஒரு சிங்கள மாணவன் சுடப்பட்டதற்கு உடன் விசாரணை! தமிழ் சமுதாயம் சிந்திக்குமா?

## கோண்டாவிலில் தந்தை செல்வா அஞ்சலிக்கூட்டம்!

தந்தை செல்வா அஞ்சலிக் கூட்டமொன்று 26-5-77 வியாழக்கிழமை பிற்பகல் கோண்டாவில் சந்திக்கருகில் திரு. பொ. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறுகிறது. கூட்டணித் தலைவர்கள், இளைஞர் பேரவை, மகளிர் பேரவை பிரதிநிதிகள் உரையாற்றுகிறார்கள்.

# 6000 சிங்களக் குடும்பங்கள் புத்தளத்தில் குடியேற்றப்படும்!

## முஸ்லிம்களின் நிலம் பறிபோகிறது!

புத்தளம் தொகுதியில் தமிழ்பேசும் மக்களிடமிருந்து சுவீகரிக்கப்பட்டுள்ள நிலம் சிங்களவர்களுக்கு வழங்கப்படவிருக்கிறது. சுமார் 6000 சிங்களக் குடும்பங்கள் புத்தளம் தொகுதியில் குடியேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிகிறது.

புத்தளம் தொகுதியில் தமிழ்பேசும் முஸ்லிம்களுக்கு சொந்தமான பல்லாயிரம் ஏக்கர் காணிகள் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டது தெரிந்ததே. இக் காணிகளை இப்போது 'ஜனவாசம்' என்ற பெயரின் கீழ் சிங்களவர்களுக்கு வழங்கப்படவிருக்கிறது. அதுவும் புத்தளம் தொகுதியைச் சேராத வெளியூர்ச் சிங்களவர்களுக்கே வழங்கப்படவுள்ளது. பாலாவியிலிருந்து கற்பிட்டிவரை சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளில் இத் திடீர் சிங்களக் குடியேற்றம் நடைபெறவுள்ளது. சுமார் 6000 சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்படவிருக்கின்றன.

இக் குடியேற்றத்துக்கு வேண்டிய நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றன. காணிகள் அளந்து பிரிக்கப்பட்டு வருகின்றன. புத்தளத்தில் எத்தனையோ முஸ்லிம்கள் காணியின்றித் தவிக்கும்போது வெளியூரிலிருந்து சிங்களவர்களை அங்கு கொண்டுவந்து குடியேற்றுவது அநீதியானதென்றும், சிங்கள ஏகாதிபத்திய விஸ்தரிப்பு என்றும், புத்தளம் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் டாக்டர் இல்யாஸ் வன்மையாக கண்டித்துள்ளார்.

## மகளிர் பிரார்த்தனை!

தமிழ் மகளிர் பேரவையின் கொழும்புக்கிளையினர் நடத்தும் வாராந்தப் பிரார்த்தனை எதிர்வரும் வெள்ளிக்கிழமை (27-5-77) 5 30 மணிக்கு கொட்டாஞ்சேனை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலில் நடைபெறும்.

# தந்தையின் புனித சாம்பல் தமிழ் மண்ணுடன் சங்கமம்!

## அதன்மீது நினைவாலயம் உருவாகும்!



ஈழ விடுதலை முன்னணி லண்டனில் 6-5-77ல் நடத்திய தந்தை செல்வா அஞ்சலிக் கூட்டத்தில் பிரபல சட்டத்தரணியும், தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்களில் ஒருவருமான திரு. அ. குமரகுரு பேசிக்கொண்டிருக்கிறார். (செய்தி 4ம் பக்கம்)

தமிழீழத்தின் முதலமைச்சர் — முத்தமிழ் உலகின் முடிசூடாமன்னர் தந்தை செல்வாவின் புனிதசாம்பல் 21-5-77 சனிக்கிழமை மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணத்தில் தமிழ் ஈழமண்ணுக்குள் நல்லடக்கம் செய்யப்பட்டது.

தந்தை செல்வாவின் புனித சாம்பலை அவரின் புதல்வர் சந்திரகாசன் வெள்ளிக்கலசத்தில் எடுத்து வந்தார். முன்னாள் கோப்பாய் தேசிய பேரவை உறுப்பினர் சிந்தனைச் சிற்பி திரு. சி. கதிரவேற்பிள்ளை, இவ் வைபவத்திற்குத் தலைமைதாங்கும்படி வண. ஆயர் அம்பலவாணரை அழைத்தார்.

இதைஅடுத்துச் சமயக் கிரியைகள் ஆரம்பமாயின. வண. ஆயர் அம்பலவாணரும்—தந்தையின் மூத்த புதல்வரும் சாம்பல் அடங்கிய வெள்ளிக் கலசத்தை கல்லறையுள் இறக்கினர். இச்சமயம் தமிழ்மக்கள் கண்களெல்லாம் கண்ணீரைப் பன்னீராய்ச் சொரிந்து தங்கள் அஞ்சலியை தன்னிகரில்லா அன்புத் தலைவருக்குச் செலுத்தினர். இவ்வேளையில் கிறீஸ்தவ கீதங்கள் இசைக்கப்பட்

—4-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஒருமொழி வைத்து உலகாண்ட தமிழன் இன்று பஞ்சையாய் பராரியாய் அவதியுறுவதேன்? அவனுக்கென்று சுதந்திரநாடு இல்லாததே காரணம்!"

## பலாங்கொடை முத்தமிழ் விழாவில் சுதந்திரன் ஆசிரியர் பேச்சு!

"ஒரு மொழிவைத்து உலகாண்டவன் தமிழன் என்று பேசுகிறோம்; கல்தோன்றி மண்தோன்ருக் காலத்தே வாளோடு முன்தோன்றிய மூத்தகுடி தமிழ்க் குடி என்றுபெருமை பேசுகிறோம்; என்று பிறந்தது என்று வரலாற்று ஆசிரியர்களும் கூறமுடியாத அளவு தொன்மை வாய்ந்த உயர்தனிச் செம் மொழியாம் எழில் தமிழை எங்கள் தாய்மொழியாக பெற்றிருக்கிறோம்; எல்லாமிருந்தும் தமிழன் இன்று பஞ்சையாய் பரராரியாய் வாழ்வதேன்? தமிழனுக்கென்ருெரு சொந்தநாடு — சுதந்திர நாடு உலகில் இல்லாததே இதற்குக் காரணம்! அந்த நிலையைப் போக்கிட, உலகில் தமிழனுக்கென் ருெரு நாட்டை — சுதந்திரத் தமிழ்ஈழத்தை — அமைத்திட உறுதியுடன் பணிபுரிவோம்!"

—இவ்வாறு பலாங்கொடை முத்தமிழ் மன்றத்தினர் நடாத்திய முத்தமிழ் விழாவில் உரையாற்றிய சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் குறிப்பிட்டார்.

இம் முத்தமிழ் விழா 14-5-77 சனிக்கிழமை பிற்பகல் பலாங்கொடை கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெற்றது. விழாவுக்கு திரு. எஸ். பெரியதம்பி அவர்கள் தலைமைதாங்கிஞர். கவியரங்கு, பட்டிமன்றம், உரையரங்கு, கலையரங்கு என நான்கு பிரிவாக நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

"வனப்புமிகு மலையகம்" எனும் தலைப்பில், திரு. சுகந்திரன் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில், செல்வி ரூபி ராஜரட்ணம், திரு. ச. யோகநாதன், ஜனுப் அ. கா. தீன், ஜனுப் எஸ். எச். எம். பாருக்அலி ஆகியோர் கவிதை பாடினர்.

"சம்பிரதாயங்கள் சமுதாயத்தின் மைல்கற்களா? தடைக்கற்களா?" எனும் தலைப்பில் இடம்பெற்ற பட்டிமன்றத்தில், திருவாளர்கள் பி. கனகசிங்கம், திரு. ச. யோகநாதன், எம். கே. விஸ்வநாதன் ஆகியோர் ஒருபுறமும், ஜனுப். முத்தலிப், இரா. மோசஸ், ஜனுப் நஜீம் மறுபுறமுமாக வாதிட்டனர். இப் பட்டிமன்றத்துக்கு நடுவர்களாக கோவை மகேசன், ஈழவேந்தன், மௌலவி முகம்மத் ஆகியோர் பணியாற்றினர்.

சொற்பொழிவுகள் வள்ளுவர் அரங்கில் நடைபெற்றது. இந் நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கிப் பேசிய திரு. பெரியதம்பி, மலையகத் தமிழ் மக்களை கைதூக்கிவிட, அனைவரும் உழைக்க வேண்டுமென்று வற்புறுத்தியதுடன், மலையகத்தான்— யாழ்ப்பாணத்தான் என்று தமிழ் மக்களை கூறுபோட முயற்சிப்பவர்களைக் கண்டித்தார்.

சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் அங்கு பேசுகையில் மேலும் கூறியதாவது:—

"தமிழ்மொழியின் மிகத் தொன்மையான நூலாக இன்று கருதப்படுவது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலாகும். இந்த இலக்கண நூல் சுமார் 3000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கூறுகிருர்கள். மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னர் தமிழுக்கு இலக்கணம் வகுக்கின்ற இந்த நூல் எழுதப்பட்டதென்ருல் — இலக்கணம் வகுக்கின்ற அளவுக்கு ஒரு மொழி வளமடைவதற்கு அதற்கு முன் எத்தனையோ ஆயிரம் ஆண்டுகள் பேசப்பட்டிருக்க வேண்டும். அத்தகைய தொன்மை மிகு மொழியான தமிழை நம் தாய்மொழியாகக் கொண்டிருக்கிறோம்.

நம்முடைய மொழியிலே இருக்கின்ற திருக்குறளை எடுத்துக்கொண்டால்—அது போன்று பிறிதொரு நூல் உலகில் வேறு எந்த மொழியிலுமே கிடையாது. உலக மொழிகளில் எல்லாம் திருக்குறள் இன்று மொழிபெயர்க்கப்பட்டுவந்தாலும் கூட — இன்றைக்கு லெனின், கார்ல்மார்க்ஸ் போன்ற அரசியல் மேதைகளையெல்லாம் விட சிறந்த சமதர்மவாதியான—புரட்சி மேதையான வள்ளுவனின் பெயர் உலகில் தெரியவேண்டிய அளவுக்கு இன்னும் தெரியவில்லையென்ருல் வள்ளுவன் பிறந்த தமிழ் இனம் இன்றைக்கும் அடிமையாக கிடப்பதுதான். தமிழனுக்கு சுதந்திர நாடொன்று இருக்குமாளுல், வள்ளுவன் புகழ்— திருக்குறளின் பெருமை — உலகில் இன்னும் கொடி கட்டிப்பறக்கும்.

உலகில் 33 நாடுகளில் வாழ்ந்துவந்த தமிழினம் இன்றைக்கு மூன்று நாடுகளில் மட்டுமே பேசப்பட்டு வருகிறது. ஏனைய முப்பது நாடுகளில் தமிழினம் தன் மொழியையும், பண்பாட்டையும் தனித்துவத்தையும் இழந்து, அழிந்துவிட்டது. இந்தநிலை இங்கும் ஏற்பட்டுவிடக்கூடாது; நமது தலைமுறையிலேயே நாம் நமது சுதந்திரத்தை மீட்டாக வேண்டும்; தமிழ் ஈழ நாட்டை அமைத்தாக வேண்டும்! எங்கிருந்தாலும், இந்த விடுதலைப்போரில் தமிழ் சமுதாயம் பங்கு கொள்ளவேண்டும்!"

### ஈழவேந்தன்

திரு. ஈழவேந்தன் அவர்கள் பேசும்போது கூறியதாவது:—

"ஒரு சமுதாயம் வாழ வேண்டுமென்ருல் — அதன் மொழி, சமயம், பண்பாடு வாழவேண்டுமென்ருல் — அந்தச் சமுதாயம் தன்னைத் தானே ஆளவேண்டும் அந்தச் சமுதாயத்துக்கு சொந்தத் தாயகம் வேண்டும். பிறர் தயவில், நல்லெண்ணத்தில் ஒரு சமுதாயம் வாழ முடியாது. இதனுல்தான் தமிழ்ஈழ மக்கள் இன்று தங்களைத் தாங்களே ஆள வேண்டுமென்று கூறுகிருர்கள்.

'தமிழனுடைய கொடியுரிமை குடியுரிமை மொழியுரிமை நிலவுரிவுரிமை அனைத்தும் பறிக்கப்கப்பட்டு இன்று அழிவின் விளிம்புக்குத் தள்ளப்பட்டு நிற்கிறது. எங்கிருந்தாலும் தாய்மொழி மூலம் — தமிழ் மொழிமூலம் உங்கள் பிள்ளைகளுக்கு கல்வியூட்டத் தவருதீர்கள் — வேற்று மொழிகளின் மயக்கத்தில் வீழ்ந்துவிடாதீர்கள்.

"எங்களுக்கென்ருேர் நாட்டை, அரசை உருவாக்கி அதில் சுதந்திர மக்க தலைநிமிர்ந்து வாழுகின்ற அந்தப் பொற்காலத்தை நோக்கிநடைபோடுவோம்."

திருவாளர்கள் இரா. சிவலிங்கம், திருச்செந்தூரன் ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினர். ஈழத்து நாகேஸ் எம். எஸ். கார்த்திகேசுவின் நகைச்சுவை நாடகம், செல்வி விஜயாம்பிகையின் பரதநாட்டியம் ஆகியனவும் இடம்பெற்றது.

## அன்பு அண்ணன்

திருக்கோணமலைக் கவிராயர்

ஆபிரகாம் லிங்கனுக்கு நிகர்த்தலிங்கன்
அன்னை தமிழ்த்தாய் பெற்ற அமிர்தலிங்கன்
சாவினிலும் தமிழ் ஈழம் கேட்கும் லிங்கன்
சன்னதமாய்த் தமிழ் முழங்கும் சமரன் லிங்கன்
நாவினிலே கலைவாணி உறையும் லிங்கன்
நமதீழத் தமிழகத்தின் முதல்வன் லிங்கன்
கோவிலிலே கோலோச்சும் கோணலிங்கன்
கொள்கையொடு அமிர்வாழ அருளல்வேண்டும்

மலர்ந்தமுகத்தெழிலரசி மனைவி, மைந்தன்
மாநகராம் லண்டனிலே வாழும் கைதி
அடர்ந்த பெரு நெற்றியிலே அறிவைக் கட்டி
அடலேறுபோல் முழங்கும் அஞ்சா நெஞ்சன்
விழுந்த தமிழ் மாதாவின் விலங்குதன்னை
வீரத்தின் களத்தினிலே தகர்க்கும் வீரன்
அருந்தவமாய் எங்களுக்குக் கிடைத்த மன்னன்
அமிர்தலிங்கம் அனைவர்க்கும் அன்பு அண்ணன்

## வாகைசூடிய வாகரை இளைஞர்கள்!

கல்குடாதொகுதியிலுள்ள வாகரை கிராமத்து தமிழ் இளைஞர்கள் இப்போது புதிய வேகத்தோடும், தமிழ்ஈழ விடுதலை உணர்வோடும் வேங்கைகளாக செயற்பட்டுவருகின்றனர். இது ஆளைக்கட்சியை கதிகலங்க அடித்துள்ளது. இதன் காரணமாக, எதுவிதகாரணமுமின்றி. வாகரை த. இ. பேரவையைச் சேர்ந்த கவிஞர் வாகரைவாணன், இ. அமிர்தலிங்கம், கு. ஆனந்தசபா, பெ. சோமலிங்கம், க. நல்லதம்பி ஆகியோர் கைதுசெய்யப்பட்டுவாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் ஒரு நாள் முழுவதும் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர், தமிழினத்திற்கு வாகை சூடி வரும் வாகரை இளைஞர்களின் துணிவை அனைவரும் பாராட்டுகின்றனர்.

## வட்டக்கச்சியில் செல்வா அஞ்சலி கூட்டம்!

மூதறிஞர் தந்தை செல்வா அவர்களின் அஞ்சலிக்கூட்டம் வட்டக்கச்சி சந்தை மைதானத்தில் இன்று (25-5-77) புதன்கிழமை மாலை நடைபெறுகிறது. கூட்டத்தில் தலைவர்கள் பலர் இங்கு உரையாற்றுவர்.

## மலையக மாணவர்கள் மீது பொலிசாரும் சிங்கள வெறியரும் இணைந்து தாக்குதல்!

சமீபத்தில் டெவன் தோட்டத்தில் பொலிஸ் துப்பாக்கிச் சூடு காரணமாக நடந்த மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்கும் பொருட்டு, கடந்த பதின்மூன்ரும் திகதி ஹைலன்ஸ் தமிழ் மாணவ மாணவியர் ஊர்வலமாகச்சென்றனர். சிறிது நேரத்தின் பின் ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்களில் அநேகம்பேர் இரத்தம் சிந்தியவாறு பாடசாலைக்கு ஓடிவந்தனர். பொலிசாரினுலும் சில வெளியாட்களாலும் தாங்கள் தாக்கப்பட்டதாக அவர்கள் எங்களிடமும் அதிபரிடமும் கூறிஞர்கள். அப்போது பாடசாலைக்கு வந்த் ஒரு பெற்ருர். இரு சிறுமிகள் மயக்கமுற்ற நிலையில் சமீபத்திலுள்ள ஒரு தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்க பட்டதாகக்கூறிஞர்கள். இந்தச்செய்தியைத் தொடர்ந்து அதிபர் மூன்று ஆசிரியர்களை, மயக்கமுற்ற பிள்ளைகளைப் பராமரித்தற்கு ஒழுங்குகள் செய்து பாடசாலைக்குகூட்டிவருவதற்காக அனுப்பிஞர். இவ்வாசிரியர்கள் பாடசாலைக்கு விரைந்து கொண்டிருக்கும் வழியில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக் காரியாலயத்திலிருந்து ஓடிவந்த சிலர் பயங்கர ஆயுதங்களை உபயோகித்து ஆசிரியர்களைத் தாக்கிஞர்கள். அத்துடன் ஆசிரியர்கள் அணிந்திருந்த கைக்கடிகாரங்களையும் வேறு விலையுயர்ந்த பொருட்களையும் பறித்துச் சென்ருர்கள்.


இவையத்தனையும் பொலிசாரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அடுத்தடுத்து நடந்து வரும் பயமுறுத்தல்களாலும் அசம்பாவிதங்களாலும் பாடசாலை பதட்ட நிலையிலுள்ளது. மாணவர்களும் ஆசிரியர்களும் தமது நாளாந்த கடமைகளைச் செய்ய முடியாதுள்ளது. மாணவர்களது ஆசிரியர்களதும் பாதுகாப்புக்காக எவ்வித் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென எமது ஆசிரியர் குழாம் கருதுகிறது.

இது தவிர மாணவர்கள் ஆசிரியர்கள் அதிபர் ஆகியோரைத் துன்புறுத்தும் முயற்சிகளில் இதில்தொடர்புடைய சிலர் முயன்று வருவதாகவும் ஆசிரியர் குழாம் அறிகிறது.

இச்சூழ்நிலையில் ஹைலன்ஸ் ஆசிரியர் குழாம் பின்வரும் தீர்மானத்தை ஏகமனதாக் நிறைவேற்றியுளது:-

—3-ம் பக்கம் பார்க்க



நிலம்கோரிய மலையகத்தமிழ் இளைஞன் இலட்சுமணன் சுட்டுக்கொல்லப்பட்டதை எதிர்த்து மட்டக்களப்பில் கவிஞர் காசி ஆனந்தன் தலைமையில் கண்டன ஊர்வலம் நடைபெற்ற காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நிறைகுடம் சரிந்தது; வாழைப்பழத்தோல்கள் மேடையை முற்றுகையிட்டன;

# பண்டத்தரிப்பில் தியாகராசா திண்டாட்டம்!

# கண்ட இடமெங்கும் கறுப்புக் கொடிகள்!

பண்டத்தரிப்பு நவீன சந்தைக் கட்டடத்தைத் திறக்கச்சென்ற தியாகராசா வகையாக மாட்டிக்கொண்டார். பண்டத்தரிப்பு நவீன சந்தை திறப்பு விழா கடந்த 13-5-77 அன்று திறந்துவைப்பதற்காக வட்டுக்கோட்டை முன்னாள் எம். பி. தியாகராசா பண்டத்தரிப்புச் சென்றார். அவர் வருகையை எதிர்த்து பண்டத்தரிப்பெங்கும் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டிருந்தன. தியாகிகள் வருகையையிட்டுப் பண்டத்தரிப்பு நகர் துக்கம் அனுஷ்டிப்பதாக அக்கறுப்புக் கொடிகள் காட்சி தந்தன.

பண்டத்தரிப்பு நவீன சந்தையைத் திறந்துவைக்க எழுந்த தியாகர் தமிழர் கூட்டணிபற்றியும் செயலாளர் நாயகம் திரு. அமிர்தலிங்கம் பற்றியும் சில குறிப்புக்கள் சொல்லமுற்பட்ட போது "அரசியல் பேசாதே திரும்பிப்போ" என்று கூட்டத்திலிருந்தோர் கூச்சலிட்டனர்.

தியாகிகள் இதனை ஆரம்பத்தில் பொருட்படுத்தாது தளபதி அமிர்தலிங்கம் தன்னுடன் போட்டியிட்டால் தோற்றுவிடுவாரென்பதால் காங்கேசன்துறைக்கு போவதாகச்செய்தியடிபடுகிறது என்று கூறியதும் மேடையை நோக்கி வாழைப்பழத் தோல்களும், சாணியும் பறந்தன.

நிறைகுடம் தட்டி வீழ்த்தப்பட்டது. கூட்டம் ஒரே அல்லோல கல்லோலப்பட்டது. இளைஞர்களின் இடைவிடாத எதிர்ப்பைக் கண்டு அங்கு நின்ற மூன்றே மூன்று பொலிசார் விழி பிதுங்கி நின்றனர்.

தியாகர் ஒருவாறு சமாளித்துக்கொண்டு வாயில் வந்தவாறு முணுமுணுத்துக் கொண்டு மேடையைவிட்டிறங்கி மெதுவாக நடையைக் கட்டிவிட்டார்.

பண்டத்தரிப்பில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கிக்கொடுத்த பணத்தில் கட்டிய கட்டடத்தை பெருமையுடன் திறந்துவைக்க முடியாத நிலைகண்டு உண்மையில் தியாகிகள் அதிர்ச்சிக்குள்ளாகியிருப்பர்.

எதிர்வரும் பொதுத்தேர்லில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் தியாகருக்கு என்ன நடக்கப்போகின்றதென்பதற்கு அவரது தொகுதியில் சமீபத்தில் நடக்கும் சம்பவங்கள் அபசகுனமாக இருக்கின்றன.

இதேபோல் காரை நகரில் சமீபத்தில் நடந்த பொதுக் கூட்டமொன்றில் வாலிபர்கள் கேள்விக்கணைகளைத் தொடுத்தனர்.

இதனைக் கண்டு திணறிய தியாகர் வாலிபர்களை ஏசினாராம். அப்போது தியாகருக்கெதிரான கோஷங்கள் கிளம்பியதுடன் டியூப்லைட்டுகளுக்கும் சேதம் ஏற்பட்டது.

பொதுமக்களுடன் கலந்துறவாடி பேசத்தெரியாத தியாகருக்கு வட்டுக்கோட்டை எதிர்வரும் தேர்தலில் நிச்சயம் நல்ல பாடம் படிப்பிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

—புத்தொளி.

## பின்னணியில் என்ன நடந்தது?

சென்ற வருடம் அமைய சுருக்கெழுத்தாளர்களாக இருந்தவர்களை நிரந்தரமாக்குவதற்காக நடாத்தப்பட்ட பரீட்சையில் தமிழர்கள் எவரும் திறமை இருந்தும் சித்தியடையாமை பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களிடையில் பெரும் அதிர்ச்சியையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக போட்டிப் பரீட்சைகளில் பெரும்பாலான தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டமை யாவரும் அறிந்ததே. ஆனால் மேற்குறிப்பிட்ட பரீட்சையில் தமிழர்கள் முற்றாக ஒதுக்கப்பட்டமை நாளுக்கு நாள் தமிழர்களின் நிலை மோசமடைந்துள்ளதை வெளிப்படையாக எடுத்துக் காட்டுகின்றது.

## அண்ணாவின் நூல் வெளியீட்டு விழா!

திரு. வித்திகன் தொகுத்துள்ள "பேரறிஞர் அண்ணாவின் தேன்துளிகள்" நூல் வெளியீட்டு விழா, 26.5.77 வியாழன் மாலை கொழும்பு சோனகத்தெருவிலுள்ள 95ம் இலக்கத்தில் நடைபெறும் விழாவில் ஈழவேந்தன், கோவை மகேசன், க. நவசோதி, சட்டத்தரணி அஷ்ரப், கு. ராமச்சந்திரன் எம். பி. பாரதி, சில்லையூர் செல்வராசன், வி. பி. கணேசன், ஆகியோர் பேசுவார்கள்.

## சில்லாலை இளைஞர்கள் தந்தைக்கு அனுதாபம்!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கோட்டையான சில்லாலை. கிராமத்தில் கதிரை மாதா கோவிலைச் சேர்ந்த இளைஞர்கள் தமிழ்ஈழத்தின் பிரிவினையைக் காட்டும் மலர்வளையம் ஒன்றைத் தயாரித்து சில்லாலையிலிருந்து கால்நடையாக ஊர்வலமாக தெல்லிப்பளை வந்து மூதறிஞருக்கு தமது இறுதி அஞ்சலியை செலுத்தியதுடன், தந்தையின் பூதவுடல் தகனத்துக்கு மறுநாள் சில்லாலை கதிரைமாதா கோவிலில் செல்வாவின் ஆத்மசாந்திக்காக திருப்பூசை நடத்தியதுடன், ஏழை மக்களுக்கு கஞ்சியும் வார்த்தனர்.

## இன்றைய கருத்தரங்கு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக் கிளையினர் இன்று நடாத்தும் வாராந்தக் கருத்தரங்கில், அருட்திரு அரியராஜா அடிகளார் 'சமயச் சான்றோரும் தமிழ் அரசியலும்' என்ற தலைப்பில் உரையாற்றுகிறார். லோறீஸ் வீதி, பம்பலப்பிட்டியிலுள்ள 51ம் இலக்க இல்லத்தில் திரு. ஈழவேந்தன் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெறும்.

## நாடகவிழா!

மன்னார் கோவிற்குளம் இந்து இளைஞர் மன்றம் அளிக்கும் நாடகவிழா 27-5-77 வெள்ளிக்கிழமை இரவு ஆரம்பமாகும். இதய தாகம், காதலும் கண்ணீரும், பட்டிம் பூ, கிழவியா குமரியா? ஆகிய நாடகங்கள் மேடையேற்றப்படும் விழா ஏற்பாடுகளை பொன் இராமநாதன், அ. சிற்றம்பலம் ஆகியோர் கவனித்துவருகின்றனர்.

## இராசலிங்கத்தை நியமித்ததற்கு கூட்டணிக்கு பாராட்டு!

"ஈழத் தமிழ் நாட்டிலே தமிழ் மக்கள் தங்கள் சகோதர தமிழ் மக்களிற் சிலரை சிறுபான்மைத் தமிழர் எனக் கூறி சமூக வாழ்வுக்குரிய அவர்களது உரிமைகள் பலவற்றை அவர்களுக்கு மறுத்து வந்த காலம் மாறித் தமிழ் மக்கள் யாவரும் சகோதரர் எனக் கூறி அவர்களது வாழ்வு மலர வேண்டுமென்று ஓயாது உழைத்துவரும் தமிழர் விடுதலைக்கூட்டணி இன்று இதே மக்கள் இன்னும் முன்னேற்றமடைய வேண்டுமென்ற ஆவலால் உந்தப்பெற்று கூட்டணி தலைவர்கள் பெரியார்கள் அளப்பரிய தியாகம் செய்து, இத் தமிழ் சகோதரர்களும் தங்கள் குறைகளை எடுத்துக் கூறி நிவர்த்திபெற வாய்ப்பளிக்குமுகமாக ஓர்தொகுதியைத் தெரிந்து, அங்கு அம்மக்களில் மிக மிகத் தகுதி வாய்ந்த திரு. இராசலிங்கம் அவர்களை அடுத்து வரும் தேசிய அரச பேரவைத் தேர்தலில் ஓர் அபேட்சகராகத் தெரிவுசெய்த அளப்பரிய மகத்துவ செயலுக்கு எம்மைப் போன்றோர் தமிழர் விடுதலை கூட்டணியின் தலைமைப் பீடத்துக்கு மாத்திரமல்ல, தமிழ் மக்களுக்கே பகிரங்கமாக நன்றி கூறாவிடின் நாம் நன்றி கெட்டவர்களாகவும் கடமையில் தவறியவர்களாகவும் கணிக்க இடமாகும்.

"அன்று இஸ்ரேல் மக்களை எகிப்து அடிமைத்தளையிலிருந்து மீட்ட மோஸஸ் எனப் புகழ்பெற்ற, மறைந்த ஈழத்தமிழ் அண்ணல் தந்தை செல்வா அவர்களுடன் இத்தகைய தொண்டுக்குத் தன்னை முழுதும் அற்பணித்த கோப்பாய் கோமான் மறைந்த வன்னியசிங்கம் அவர்களும், இன்று தமிழர் விடுதலை கூட்டணியின் இப்புகழ் பெற்ற தியாகச் செயலை காணப் புவியில் இல்லையே என்று நாம் கவலைப் படுகின்ற அதே வேளையில் அண்ணலவர்களது பாத வடிகளைப் பின்பற்ற உறுதி பூண்டு அயராது உழைத்து வரும் தமிழர் விடுதலை கூட்டணியின் இன்றைய தலைவர்கள் யாவருக்கும் எமது மனமார்ந்த இதயபூர்வமான நன்றியை சமர்ப்பிக்கின்றோம்.

— இவ்வாறு யாழ்ப்பாண மாநகர முன்னாள் உதவி மேயரும்; யாழ் தொழில் நுட்பக்கல்லூரியின் முன்னாள் அதிபருமான திரு எஸ். ஜே. அன்ரனி சுதந்திரனுக்கு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## சொன்னதை செய்வோம்! நினைத்ததை முடிப்போம்!

### கருத்தரங்கில் செல்வகுமார் பேச்சு!

'இளைஞர்களாகிய எங்களை சரியான பாதையில் வழிநடத்த மாவைசிங்கம் அண்ணன் சேனாதிராஜா இருக்கிறார். தனித்தமிழ் ஈழம் என்ற புனிதமான இலட்சியத்தைவென்றெடுப்பதற்காக அண்ணன் அமிர்தலிங்கம், அண்ணன் சிவசிதம்பரம் ஆகியவர்கள் இடும் கட்டளையை ஏற்று நடப்போம். கூட்டணியென்ற அமைப்பை பலப்படுத்துவதன்மூலம்தான் தான் அடுத்த ஆறு ஆண்டுகளுக்குள் தமிழ்ஈழ அரசை நாம் நிறுவமுடியும் தேர்தல் பற்றியே கதைத்து எம்மை விரக்திக்கு ஆளாக்காதீர்கள். விடுதலைக்காக எதையும் கட்டளையிடுங்கள்; செய்யக் காத்திருக்கிறோம். வீரர் பரம்பரையில் தோன்றிய தமிழர்களாகிய நாம்



நினைத்ததை நடத்தி முடிப்போம்! சொன்னதை செய்து முடிப்போம்."

—மேற்கண்டவாறு துரையப்பா கொலைவழக்கில் சந்தேக நபராக ஒன்றரை ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்துவிட்டு அண்மையில் விடுதலையான இளைஞர் செய்வக்குமார் 18-5-77ல் கொழும்பில் நடைபெற்ற கூட்டணிக்கருத்தரங்கில் பேசியபோது குறிப்பிட்டார்; இக்கருத்தரங்கு திரு. ஈழவேந்தன் தலைமையில் நடைபெற்றது.

திரு. செல்வக்குமார் சென்ற சனி, ஞாயிறு புத்தளம் சென்று, புத்தளம் பள்ளி வாசலில் படுகொலை செய்யப்பட்ட இஸ்லாமிய சகோதரர்களின் உறவினர்களை சந்தித்துதம்இரங்கலைத் தெரிவித்துக்கொண்டார்.

## மலையக மாண...

—2-ம் பக்கத் தொடர்

"மாணவர்கள் மீதும் ஆசிரியர்கள் மீதும் மேற்கொள்ளப்பட்ட மிருகத்தனமான தாக்குதல்கள் நீதியற்றதும் முறைகேடானதுமாகும். இது தொடர்பாக பாரபட்சமற்ற, பகிரங்க விசாரணை நடத்தி குற்றவாளிகள் தண்டிக்கப் படவேண்டும் எனவும், சுற்று வட்டாரத்தில் சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் எனவும் எமது குழாம் கல்வி அமைச்சரையும் அரசாங்கத்தையும் கேட்டுக்கொள்கிறது."

## "மலையகத் தமிழன் அடிமைத்தனம் நீங்கதனி நாடே ஒரே வழி!"

"மலையகத்தில் அடுத்தடுத்து நடைபெற்றுவரும் அசம்பாவித சம்பவங்களை ஆழ்ந்து கவனிக்கும்போது தமிழன், தன்னைத்தானே ஆழவேண்டும் என்ற இறுதியான முடிவிற்கு பலவந்தமாக தள்ளப்படுகின்றான். தனிநாட்டுக் கோரிக்கையை ஆதரிக்காது இருந்து வந்தவர்கள்கூட இப்போது இதை பகிரங்கமாக ஒப்புகொள்கின்றனர்."

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் கழக இராகலை மாவட்டத்தலைவர் திரு. கே. பெரமையா இலங்கைத் தொழிலாளர் கழக இராகலை மாவட்ட பணிமனையில் நடைப்பெற்ற வாலிப முன்னணி கூட்டத்தில் உரையாற்றும்போது கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் மலையகத்தில் தமிழனாகப் பிறந்துவிட்ட ஒரே குற்றத்துக்காக மிகக் கேவலமான நிலையில் வாழவேண்டியுள்ளது. ஏதும் அறியாத தொழிலாளர்கள் பழிவாங்கப்படுகின்றனர். தங்கள் சகோதரன் ஒருவன் பலியானதற்கு ஆட்சேபம் தெரிவிக்ககூட உரிமையில்லாத நிலை ஏற்பட்டுள்ளது இந்நிலை தொடரத்தான்வேண்டுமா?

தமிழர் விடுதலைக் கூட்டணி தனிநாட்டுக் கொள்கையை முன்வைத்தபோது அதை ஏற்க மறுத்தவர்கள் கூட இன்று மலையகத்தில் அடுத்தடுத்து ஏற்படும் சம்பவங்களை கண்டு தமிழன் வாழவேண்டுமானால் அவன் தன்னைத்தானே ஆழவேண்டும் என்ற நிலையை பகிரங்கமாக ஒப்புக்கொள்கின்றனர் என்று கூறினார்.

மற்றும் இராகலை மாவட்டப் பிரதிநிதிகள் திருவா

—4ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தலைமைத்தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

# காங்கேசன்துறைதொகுதியில் பொலீஸ் வெறியாட்டம்!

சுதந்திரன்
SUTANTIRAN

## பொதுமக்கள் மீது தாக்குதல்! கடைகள் நொருக்கப்பட்டன!

**காங்கேசன்துறை தொகுதியிலுள்ள கிராமங்களில் பொலிசாரின் காடைத்தனம் உக்கிரமடைந்துள்ளது. அப்பாவி பொதுமக்கள் மிலேச்சத்தனமாக தாக்கப்படுவதுடன், கடைகள் அடித்து நொருக்கப்படுகின்றன. தமிழர் விடுதலைக்கூட்டணியின் உதயசூரியன் கொடிகள் இறக்கப் படுகின்றன. பொலிசாரின் இந்த அட்டகாசம் குறித்து, த. வி. கூ. செயலதிபர் அ. அமிர்தலிங்கம், சட்டத்தரணி அ. நடசாசா தந்தை செல்வாவின் மகன் சட்டத்தரணி சா. செ. சந்திரகாசன் ஆகியோர் உடன் நடவடிக்கை எடுத்துள்ளனர்.**

18-5-77 புதன்கிழமை இரகசிய பொலிசார் இருவர் இணுவிலில் வைத்து இனந் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டதை யடுத்து, பொதுமக்கள் மீது பொலிசாரின் காரணமற்ற மிலேச்சத்தனமான தாக்குதல் அதிகரித்துள்ளது.

டிரக்குகளில் சாதாரண உடையில் வந்த பொலிசார் தெருவில் செல்லும் சாதாரண பொதுமக்களை தாக்குவதுடன், கடைகளையும் அடித்து உடைத்துசேதம் விளைத்துள்ளனராம்.

காங்கேசன்துறை, தெல்லிப்பளை, மயிலிட்டி, மல்லாகம், ஆகிய இடங்களில் பொலிசாரின் வெறித்தாக்குதல் உச்சக்கட்டத்தில் நடைபெற்றுள்ளது. மல்லாகம் சந்தியில் 3 கடைகள் அடித்து நொருக்கப்பட்டுள்ளன. தெல்லிப்பளை சந்தியில் கூட்டுறவுச் சிற்றுண்டிச் சாலையொன்றுக்கு சேதம் விளைவிக்கப்பட்டது. பலர் காயத்துக்குள்ளாயினர்; ஒருவர் நிலை கவலைக்கிடமாகியுள்ளது.

இத்தாக்குதல் சம்பந்தமாக அடையாள அணி வகுப்பு ஒன்று நடத்தப்பட வேண்டுமென சட்டத்தரணி திரு. சு. நடராசா கோரியுள்ளார்.

## கல்குடா தொகுதியில் இளைஞர் எழுச்சி மாநாடு

ஈழத்தமிழர்கள் இன்று நடாத்திக்கொண்டிருக்கும் விடுதலைப் போராட்டத்திற்கு உற்றதுணையாக விளங்கும்பொருட்டு, கோரளை வடக்கு கிராமங்களைச் சேர்ந்த (காயாங்கேணி, பனிச்சங்கேணி மாங்கேணி, வாகரை, பாற்சேனை, கதிரவெளி) தமிழ் இளைஞர்களெல்லாம் ஒன்றுசேர்ந்து ஒரு பெரும் இளைஞர் எழுச்சி மாநாட்டை அடுத்தமாதம் ஆனி 3ம் நாள் வாகரையில் நடாத்தவுள்ளனர். 300க்கு மேற்பட்ட இளைஞர்கள் தத்தம் ஊர்களிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு வாகரையிலுள்ள அறிஞர் அண்ணா அறிவாலயத்தை காலை 10 மணிக்கு வந்தடைவர். அங்கு ஒருகருத்தரங்கும் கோரளை வடக்கில் கூட்டணி சார்பான பிரச்சாரத்தைச் சிறப்பான முறையில் செய்வதற்குப் பொதுவான ஒரு செயற்குழுவும் தெரிவுசெய்யப்படும். அதன்பின் இளைஞர்கள் எல்லோருக்கும் மதிய உணவு அளிக்கப்படும்;

பி. ப. 3மணிக்கு உதயசூரியன் கொடியேற்றத்தோடு சிறப்பானமுறையில் மகாநாடு, வாகரையில் உள்ள கலைஞர் கருணாநிதி அரங்கில் ஆரம்பமாகும். கற்குடாத் தொகுதியின் கூட்டணி வேட்பாளர் திரு. சி. சம்பந்தமூர்த்தியும் மற்றும் பல கூட்டணிப் பிரமுகர்களும் கலந்து கொண்டு சிறப்பாக்கவிருக்கும் இம் மகாநாட்டிற்கான பணிகளில் வாகரைத் தமிழ் இளைஞர் — மகளிர் பேரவையினா மற்றையக் கிராமங்களின் இளைஞர்களின் பூரண ஒத்துழைப்புடன் ஈடுபட்டுவருகின்றனர். மாநாட்டில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

டாக்டர் நித்தியானந்தா பேசுகையில் 'இளைஞர்கள் கண்விழித்துவிட்டார்கள்.

தந்தை செல்லாவின் தனிநாட்டு இலட்சியம் நிறைவேற அதிக காலம் செல்லாது' என்று குறிப்பிட்டார்

திருவாளர்கள் குலசேகரம், இரா. சிவலிங்கம், இளைஞர் கிருஷ்ணன் ஆகியோரும் பேசினர்.

## தந்தையின் புனித சாம்...

—1-ம் பக்கத்தொடர்

டன. இதனை அடுத்து பொன்தூவி தங்கள் தலைவனைத் தம்மிழீழத்துள் அழைத்துவரத் துடித்த தமிழ்மக்கள், கைகளால் மண் தூவி அவன் கல்லறையை நிரப்பினர். வாழ் நாளெல்லாம் தமிழ்மக்கள் நினைவால் மூடப்பட்டிருந்த அந்தத் திருவுடல் அதே அன்பர்களின் கைமணலால் மண்ணுள் மறைந்தது. கைகளைக்கூப்பி அந்த அற்புத புருஷரை மானசீகமாகத் தொழுதது தமிழ் இனம்.

இவ் வைபவத்தின்போது தந்தையின் அருமைத் துணைவியார், அன்பு மகள், கனடாவில் இருந்து வந்த புதல்வர் உட்பட அவரின் அருமைப் புதல்வர்கள் மூவரும் சமூகமளித்தனர். தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கமும், காங்கிரஸ் பிரமுகர்கள், சட்டத்தரணி ஆர். விஸ்வநாதன், ஆனந்த சங்கரி, திருநாவுக்கரசு. முதலானோரும், உடுப்பிட்டி வேட்பாளர் ராஜலிங்கமும் கம்யூனிஸ்ட் பிரமுகர் திரு. வி. பொன்னம்பலம், ஆகியோரும் காணப்பட்டனர். திருமலையிலிருந்து சம்பந்தரும், மன்னாரிலிருந்து யோண் மார்க்கும் வந்திருந்தனர். மற்றும் மங்கையற்கரசி அமிர்தலிங்கம் உட்பட மகளிர் பேரவை உறுப்பினர்களும் பங்குபற்றினர்.

இவ் வைபவத்தை முன்னிட்டு நல்லூர். தமிழ் இளைஞர் பேரவையினர் டாக்ஸி ஒன்றின்மேல் நம் தேசபிதா என எழுதப்பட்ட தந்தையின் பெரிய அளவிலான திருவுருவப்படத்துடன் ஊர்வலமாக வந்தனர்.

சாம்பல் அடக்கம் செய்யப்பட்டதும் அவ்விடம் உடனடியாக மூடிக்கட்டப்பட்டது. இக் கட்டிடத்தின் மேல் தந்தையின் புதல்வர் சந்திரகாசன் செந்நிறரோஜா மலர்களை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

இச்சமயத்தில் அங்குவந்த கட்டிடக்கலைஞர். தந்தையின் நினைவாலய அமைப்பு வரைப்படத்தை திருமதி செல்வநாயகத்திற்கும் மகனுக்கும் காண்பித்தார்.

தந்தையின் அஸ்தி அடக்கம் செய்யப்பட்டஇடத்தில் முக்கோண வடிவிலான கல்லறைக் கட்டிடமும் அதன் முன்பாக பெரிய மண்டபம் ஒன்றும் அமைக்கப்பட உள்ளது. மண்டபத்தின் மேல் முக்கோண வடிவமான கூர்க்கோபுரம் எழுப்பப்படும். இதற்கான சிற்ப வேலைகள் தமிழ்க் கலாச்சார முறைப்படி அமையும், கலைஞர் கருணாநிதி இதற்கான ஆலோசனைகள் வழங்குவார். நினைவாலயத்தைச் சுற்றிவர சங்கிலியாலான காவல் வேலி ஏற்படுத்தப்படும்.

(யாழ் நிருபர்)

### மலையகத் தமிழன்...

—3-ம் பக்கத் தொடர்

ளர்கள் வி. ஏ. நாதன், கே. பி. எஸ். துரை ஜி. எல். டி. கோவிந்தராஜன், மாவட்டச் செயலாளர் திரு. எம். ஆர். கே. காளிமுத்து ஆகியோரும் உரையாற்றினர்.

## தெல்லிப் பளையில் நல்லடக்கம்

தெல்லிப்பளையில் தந்தையின் குடும்பச் சேமக்காலையில் புனித சாம்பலின் ஒரு பகுதி 21-5-77 சனி காலை நல்லடக்கம் செய்யப்பட்டது. அமரரின் குடும்பத்தினரும், உற்றார் உறவினர், ஊரவரும உட்படப் பெருந்தொகையானமக்கள் இதில் கலந்துகொண்டனர்.

இதற்குமுன்பு தந்தை செல்வநாயகத்தின் வாழ்வை இலட்சிய வாழ்வாக அமைத்து அவரைச் சிறப்பித்தமைக்காக இறைவனுக்கு நன்றி செலுத்தி தோத்திர ஆராதனை ஒன்று கிறீஸ்தவ ஆலயத்தில் நடாத்தப்பட்டது.

## எந்த வழியிற் சென்றும் தனி நாடு அமைப்போம்

### லண்டனில் குமரகுரு முழக்கம்

'ஈழத் தமிழர்களுக்குத் தனிநாடு பெறுவதற்கு வாய்ப்பான ஒரே வழி கம்யூனிசம்தான் என்றால் அவ்வழியே செல்வதற்கு தமிழர் விடுதலைக்கூட்டணி தயங்கக் கூடாது. இதுதான் இளைஞர்கள் விரும்பும்வழி தந்தை செல்வாவும் சாதி சமயபாகுபாடற்ற, ஏற்றத்தாழ்வு இல்லாத ஒரு சோசலிச சமுதாயத்தைத்தான் விரும்பினார்."

இவ்வாறு தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயற்குழு உறுப்பினர் சட்டத்தரணி திரு. அ. குமரகுரு இலண்டன் தமிழர் கழகத்தால் நடத்தப்பெற்ற தந்தை செல்வாவின் இரங்கற் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் 'பழமையைப் போற்றிப் பாதுகாக்கும் இங்கிலாந்து போன்ற முதலாளித்துவ நாடுகளிலேயே இன்று சோசலிசக்கொள்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றதெனில், திருவள்ளுவர் காலத்திலிருந்தே பொதுவுடமைக்கொள்கைகளை அறிந்திருந்த தமிழர்கள் ஏன் சோசலிசப் பாதையை நாடக்கூடாது" என்றார்.

இலண்டன் தென்மேற்குப் பகுதியில் விம்பிள்டன் என்னும் இடத்தில் கடந்த சனிக்கிழமை 7-5-77 நடைபெற்ற இக்கூட்டத்திற்கு பல இலண்டன் வாழ் தமிழ் பிரமுகர்கள் சமுகமளித்திருந்தனர். இளைப்பாறிய கல்வி அதிகாரி திரு. சங்கரலிங்கம் இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

பிரித்தானியா இந்துஆலய அறங்காவலர் சட்டத்தரணி திரு. சபாபதிப்பிள்ளை பேசுகையில் "சேர் பொன்னம்பலம் இராமநாதன் அரசியலில் இருந்த காலத்தில் திரு. செல்வநாயகம் போன்ற தீர்க்கதரிசிகள் இருந்திருந்தால் எமக்கு எப்போதோ தனிநாடு கிடைத்திருக்கும். தந்தை செல்வாவைப் போன்ற நேர்மையும், நிதானமும், தீர்க்கதரிசனமும் ஒருங்கே அமைந்த பெருந்தலைவர் தமிழர்கள் மத்தியில் இந்த நூற்றுண்டில் தோன்றவில்லை" என்று கூறினார்.

## த. இ. பேரவை மத்திய செயற்குழு

தமிழ் இளைஞர் பேரவையின் மத்திய செயற்குழுக் கூட்டம் 28-5-77 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமை செயலகத்தில் நடைபெறும் கூட்டத்தில் பேரவையின் அமைப்பு விதிகள் பற்றி ஆராயப்படவிருக்கிறது.

## பாதிக்கப்பட்ட மலையக தமிழர் குடும்பங்களுக்கு இலங்கை இந்து இளைஞர் பேரவை உதவி

மலையகத்தில் அண்மையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டால் மரணம் அடைந்த இளைஞனின் குடும்பம், டெல்டா தோட்டத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஆகியவற்றிற்கு உதவி செய்ய இந்து இளைஞர் பேரவை நடவடிக்கை எடுத்துவருகிறது. இது தொடர்பாக, புசல்லாவை இந்து இளைஞர் மன்றச் செயலாளர் திரு. பெரியசாமி, சங்குவாரித் தோட்டம் மேற் கணக்கைச் சேர்ந்த ஆசிரியர் திரு. வடிவேல் ஆகியோர் இதற்குரிய விபரங்களைச் சேகரித்து வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட மலையக மக்களின் மறுவாழ்வுக்கென இந்து இளைஞர் பேரவை நிதியொன்றை நடாத்தி வருகின்றது. 1974ம் ஆண்டு மலையகத்தில் ஏற்பட்ட மண்சரிவில் பாதிக்கப்பட்டவர்களுக்காகவும்தொடங்கபட்ட இந்த நிதிக்கு நன்கொடைகளைப் பொருளாகவும் பணமாகவும், வழங்க விரும்புபவர்கள், திரு. க. சச்சிதானந்தன், தலைமைச் செயலாளர், இலங்கை இந்து இளைஞர் பேரவை, 271, செட்டியார் தெரு, கொழும்பு 11. என்ற முகவரியுடன் கடிதத்தின் மூலம் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

'நீமா ரொக்ஸ்'

(கிருமி நாசினி)

பயிர் பாதுகாப்புக்கு சிறந்தது. புதிய தயாரிப்பாக விற்பனைக்கு வந்துள்ளது. இன்றே வாங்கி உபயோகியுங்கள்.

ஒரு மில்க்வைற் தயாரிப்பு

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1977ம் வருடம்மே மாதம் 25ந் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org